## சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு

## சபரகமுவ மாகாண அரச சேவையின் உள்ளூராட்சி நிறுவனங்களின் நூலகர் சேவையின் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2019

2014 நவம்பர் மாதம் 19 ஆம் திகதியில் இருந்து அமுலிற்கு வரும் வகையில் சபரகமுவ மாகாண கௌரவ ஆளுநர் அவர்களினால் அனுமதிக்கப்பட்ட சபரகமுவ மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களின் நூலகர் பதவிக்கான சேவைப் பிரமாணக் குறிப்பில் 2019.05.08 ஆம் திகதி திருத்திய பத்திரம் 01 இன் நிபந்தனைகளுக்கு அமைய , சபரகமுவ மாகாண அரச சேவையின் உள்ளூராட்சி நிறுவனங்களின் நூலகர் சேவை தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1.0** இப் பரீட்சை இரத்தினபுரி நகரில் மாத்திரமே இடம்பெறும்.இப் பரீட்சை சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரம் அளிக்கப்பட்ட நிறுவனத்தினால் நடாத்தப்படுவதுடன் , பரீட்சை இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.இப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கு அமைய அரச நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய 15/90 ஏற்பாட்டிற்கு அமைய மாவட்ட மக்களின் விகிதாசாரத்திற்கு ஏற்ப இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய இரு மாவட்டங்களிலும் தேர்ச்சி பெற்றவர்களின் தகுதிக்கு ஏற்ப வரிசை ஒழுங்கிற்கு அமைய சபரகமுவ மாகாண அரச சேவையின் உள்ளூராட்சி நிறுவனங்களின் நூலகர் சேவை தரம் III பதவிக்காக நியமிக்க தெரிவு செய்யப்படுவர்.

**2.0** நூலகர் சேவைக்கான மொத்த பதவி வெற்றிடங்கள் 27 ஆகும். சேவைப் பிரமாணக் குறிப்பில் 7.1 இன் நிபந்தனைகளுக்கு அமைய மற்றும் குறிப்பிற்கு அமைய திறந்தப் போட்டிப் பரீட்சையில் 70% (19) நிரப்புவதுடன் , 30 % (08) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் ஊடாக நிரப்புவதுடன் , எதிர்காலத்தில் 02 வருடங்களில் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இப் போட்டிப் பரீட்சை உபயோகிக்கப்படும்.நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரிகளினால் உறுதி செய்யப்படும்.மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் ஊடாக நிரப்பப்படவுள்ள வெற்றிடங்களுக்கு போதுமான விண்ணப்பதாரிகள் இல்லாது விடின் , அவ் வெற்றிடங்களும் , இந்த திறந்தப் போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய திறன்களின் அடிப்படையில் வரிசை ஒழுங்கில் நிரப்பப்படும். ஆட்சேர்ப்பு அறிவித்தலுக்கு அமைய வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிரப்பாது விடுதல் தொடர்பான இறுதித் தீர்மானத்தினை சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவே எடுக்கும்.

**3.0 சம்பளம்** : இலக்கம் 03/2016 மற்றும் 2016.02.25 ஆம் திகதி அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய சபரகமுவ மாகாண அரச சேவையின் நூலகர் சேவை தரம் III க்கு உரிய சம்பள வகுதி MN 3 -2016 மற்றும் மாதாந்த சம்பள அளவு ரூ.31,040-10x445-11x660-10x730-10 x 750- ரூ.57,550/- ஆகும்.

**4.0** இப்பதவி நிரந்தரமானதும் , ஓய்வூதியமுடையது.இருப்பினும்அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை அடிப்படையிலான தீர்மானங்களுக்குட்பட வேண்டும்.

**5.0 தகைமைகள்** : சபரகமுவ மாகாண அரச சேவையின் நூலகர் சேவை தரம் III இற்கான பதவிக்கு இணைத்துக் கொள்வதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(அ). சபரகமுவ மாகாணத்தினுள் நிரந்தர வதிவாளராக இருப்பதுடன், இலங்கை பிரஜையாக இருக்க வேண்டும் .விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு கிட்டிய 3 வருடங்களுக்கு நிரந்திர வதிவிடமில்லை எனில் , விண்ணப்பதாரியின் துணைவர் விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு கிட்டிய 3 வருடங்கள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ). விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(இ).

I. தாய் மொழி (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) மொழி , கணிதம் , ஆங்கில மொழி மற்றும் மேலும் இரண்டு (02) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் கா.பொ.த (சாதாரண தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்து இருக்க வேண்டும்.

அத்துடன்

II. கல்விப் பொதுத் தர (உயர் தரம்) பரீட்சையில் அனைத்து பாடங்களிலும் பொது அறிவு மற்றும் ஆங்கிலம் தவிர சித்தியடைந்து இருத்தல் , ( பழைய பாடவிதானத்திற்கு அமைய 03 பாடங்களில் ஒரே தடவை சித்தியடைதல் போதுமானது)

அத்துடன்

(ஈ)

I. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் நூலகவியல் பற்றிய மூன்று வருடகால டிப்ளோமா பாடநெறியினை சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

II. இலங்கை நூலகச் சங்கத்தின் நூலகவியல் பற்றிய மூன்று வருட கால டிப்ளோமா பாடநெறியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

III. நூலகவியல் தொடர்பாக மேலே குறிப்பிடப்பட்ட (I) மற்றும் (II) இனை விட மேலதிக தகைமைகளைக் கொண்டிருத்தல்.

குறிப்பு : (I) நூலகவியல் பற்றிய மூன்று வருட கால டிப்ளோமா பாடநெறியினை பயிலாத விண்ணப்பதாரிகள் இல்லாத சந்தர்ப்பத்தில் மாத்திரம் நூலகவியல் தொடர்பான பட்டம் பெற்ற (பாடமாக அல்லாமல்) விண்ணபதாரிகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படுவர்.இருப்பினும் இப் பதவின் சம்பளம் பட்டதாரிகளுக்கான சம்பளத் திட்டம் இல்லை என்பதனைக் கவனத்திற் கொள்க.

(II) சகல விண்ணப்பதாரிகளும் உரிய சகல தகைமைகளையும் 2019.06.27 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.

## 6.0 பரீட்சைத் திட்டம்:

இப்பரீட்சை தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளில் நடாத்தப்படும்.விண்ணப்பதாரிக்கு அவரின் விருப்பத்திற்கு அமைய குறித்த ஒரு மொழியில் பரீட்சைக்கு தோற்ற முடியும் என்பதுடன் , விண்ணப்பித்த மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. இப் பரீட்சை கீழ் குறிப்பிடப்பட்டவாறான எழுத்துப் பரீட்சை வினாத்தாள்களைக் கொண்டிருக்கும்.

| | பாடம் | புள்ளி | காலம் |
|---|---|---|---|
| i. | நூலகவியல் | 100 | 03 மணித்தியாலம் |
| ii. | பொது உளச்சார்பு | 100 | 01 மணித்தியாலம் |
| iii. | பொது அறிவு | 100 | 01 மணித்தியாலம் |

மேலே குறிப்பிடப்பட்ட பாடங்களுக்கான பாடவிதானம் கீழ் வருமாறு.

### 6.1 நூலகவியல்

**1. நூலகங்களும் நூலகத்துவமும்**

(அ) நூலகங்களும் நூலகத்தின் வரலாறும் , நவீன மற்றும் புராதன உலகத்தின் பிரதான நூலகங்கள்

(ஆ) எழுத்துக்கலை மற்றும் புத்தகங்கள் உள்ளடங்களானதுமான எழுதப்பட்ட ஊடகங்களின் ஆரம்பமும் , பரிமாண வளர்ச்சியும்.

(இ) அச்சிடற்றொழில் நுட்பத்தின் ஆரம்பமும் விரிவாக்கமும் , சமூக அபிவிருத்தி விடயங்களில் நூலகங்களின் பங்களிப்பும்.

(ஈ) நூல் நிலைய வகைகள்

i. விசேட நூலகங்கள்
அமைச்சுக்கள் , திணைக்களங்கள் , உள்ளூராட்சி சபைகள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் முதலான நிறுவனங்களில் நூலகங்கள் , ஆராய்ச்சி நூலகங்கள் போன்றவற்றின் கட்டமைப்பு , தொழிற்பாடு மற்றும் நூலக சேவைகள்.

ii. கல்விசார் நூலகங்கள்
பல்கலைக்கழகங்கள் , ஏனைய உயர்கல்வி நிறுவனங்கள் சார்ந்த நூல் நிலையங்களின் கட்டமைப்பும், தொழிற்பாடு மற்றும் நூலக சேவைகள்

iii. பாடசாலை நூலகங்கள்

iv. பொது நூலகங்கள்

v. பிரிவென நூலகங்கள் மற்றும் துறவிமட / சமய நிறுவனங்களின் நூலகங்கள்

(உ) நூலகக் குழுக்களின் கட்டமைப்பு , தேவைப்பாடு மற்றும் அதன் பணிகள்.

(ஊ) நூலக தொழிலுக்குரிய கற்றறிந்தோர் தொழில் அமைப்புக்கள் மற்றும் அவற்றின் தொழிற்பாடுகள் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் (இலங்கை , இந்தியா,அமெரிக்கா மற்றும் பிரித்தானியா)

(எ) நூல் நிலையக்கட்டிடங்கள் – திட்டமிடலில் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்.தற்போதுள்ள கட்டடமொன்றில் நூலகம் ஒன்றை தாபித்தல் , அமைத்தல் அல்லது மேம்படுத்தலில் கவனத்தில் கொள்ள வேண்டியவை.

(ஏ) நூலகப் பொருட்களைப் பராமரித்தல் பேணிப்பாதுகாத்தல் (Conservation) மற்றும் காப்பீடு (Preservation)

(ஐ) இடர்களும் (Disasters) மற்றும் இடர்முகாமைத்துவமும் (Disaster Management)

**2. அறிவையும் தகவல்களினையும் ஒழுங்கமைத்தல்**

(அ) நூல்களை வகைப்படுத்தலின் நோக்கங்களும் நன்மைகளும்.

(ஆ) இலங்கை நூலகங்களில் கையாளப்படும் பிரதான பகுப்பாக்கத்திட்டங்கள் தசமதான (Decimal) பகுப்பாக்கத் திட்டங்கள் , சர்வதேச தசமதான (Decimal) பகுப்பாக்கத் திட்டம்.

(இ) நூலக பட்டியலாக்கத்தின் குறிக்கோளும் ஏங்கிலோ அமெரிக்க பட்டியலாக்கல் சட்டக்கோவை (A.A.C.R) முறையும்.

(ஈ) நூல்களைப் பற்றிய விவரங்கள்.

(உ) (A.A.C.R) விதிமுறைகளைப் பயன்படுத்தி பதிவுப் பட்டியல் தயாரித்தல்.

**3. நூல் நிலைய வளங்களும் தகவல் சேவையும்**

(அ) பலவகையான நூலக வளங்கள்

(ஆ) சேர்ந்த அபிவிருத்தி , சேர்ந்த அபிவிருத்திக் கொள்கை மற்றும் அதன் முக்கியத்துவம்

(இ) நூலக வளங்களைத் தெரிவு செய்தல் அடங்கலான ஏற்பு செயற்பாடுகள்

I. நூலக வளங்களை தெரிவு செய்தலின் கோட்பாடுகளும் மூலங்களும்

II. ஏற்பு செயற்பாடுகள் , தளக்கோளம் உட்பட பல்வகையான தொழில்நுட்பச் சேவைகள்

III. இருப்புக்களை மீளாய்தலும் அகற்றும் செயற்பாடும்

(ஈ) வெ ளியீடு வெளியீட்டு உரிமையும் ,தடையும்

(உ) நடைமுறை விழிப்புணர்வுச் சேவைகள்

(ஊ) வாசகர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்

(எ) மக்கள் தொடர்பும் நூலகங்களுக்கான பிரசாரங்களும்

**4. தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் (**Information **Communication Technology)**

நூலகங்களில் கணனிகளை பயன்படுத்தலும் , நூலக நடவடிக்கைகளின் போது தகவல் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவமும் உற்பத்திப் பெருக்கமும்.

6.2 **பொது உளச்சார்பு** :

சொற்கள் , எண்கள் மற்றும் உருவ வடிவில் தரப்படும் பிரச்சினைகள் தொடர்பான பரீட்சாத்தியின் தீர்மானங்களையும் பதிலளிப்புக்களையும் கொண்டு அவற்றை கிரகிப்பதிலும் அளவிடுவதிலும் , காலம் மற்றும் அவகாசத்திற்கு இடையிலான தொடர்பினை உணர்ந்து கொள்வதிலும் பரீட்சார்த்திக்கு உள்ள ஆற்றலையும் புத்தி கூர்மையையும் அளவிடுவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படும்.

6.3 **பொது அறிவு** :

தேசிய பிராந்திய அத்துடன் அனைத்துலக ரீதியிலான பல அமைப்புகளைப் போன்று எமது சமூகத்தில் நிலவும் சமூக , கலாசார , கல்வி , அரசியல் , பொருளாதாரம் அத்துடன் ஏனைய காரணிகளைப் பற்றியும் நூலக விடயம் மற்றும் நூலகத்துறை மீதான பரீட்சார்த்தியின் பொது அறிவு மற்றும் விழிப்புணர்வை பற்றியும் மதிப்பெழுவது இதன் மூலம் எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

நியமனத்திற்கு தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் நாற்பது வீதம் (40%) பரீட்சார்த்திகள் பெற்றுக் கொள்ள வேண்டும்.எனினும் விண்ணப்பதாரிகள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் வரிசை ஒழுங்கிலேயே நியமனம் வழங்கப்படும்.

**குறிப்பு –**

பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமையுடைய விண்ணப்பங்கள் வெற்றிடங்களினை விட குறைவாக விண்ணப்பித்திருந்தால் , எழுத்துப் பரீட்சை நடத்தாமல் நேர்முகப் பரீட்சை மூலம் தகைமைகளைப் பரீட்சித்து நியமனங்கள் வழங்கப்படும்.

## 7.0 பரீட்சைக் கட்டணம் :

பரீட்சைக் கட்டணம் ரூ.1000/- ஆகும். சப்ரகமுவ மாகாண சபையின் எந்தவொரு அமைச்சு அலுவலகத்திற்கு / திணைக்களத்திற்கு (உள்ளூராட்சி நிறுவனம் தவிர) அல்லது சப்ரகமுவ மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திற்கும் பணமாக செலுத்தி அதற்காக வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் குறித்த கட்டத்தினுள் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். **இப் பரீட்சைக் கட்டணத்தை சபரகமுவ மாகாண சபையின் 20.03.02.99 என்ற வருமானத் தலைப்பிற்கு வரவு வைக்க வேண்டும்.**_செலுத்தப்படுகின்ற பரீட்சைக் கட்டணம் எக் காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது.அத்துடன் காசுக் கட்டளை மற்றும் முத்திரைகள் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.பற்றுச் சீட்டின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயனுடையதாகும்.

## 8.0 விண்ணப்பப்படிவம்:

A-4 அளவிலான கடதாசிகளை உபயோகித்து,

(அ). தொடரிலக்கம் 01 முதல் 04 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும்,

(ஆ). இல 05 முதல் 06 வரை இரண்டாம் பக்கத்திலும் அடங்குமாறு இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலத்தினைக் கொண்டு தமது கையெழுத்தினாலே தெளிவாக நிரப்புதல் வேண்டும்.

(இ).விண்ணப்பப்படிவங்களை தயாரிக்கும் போது சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரினை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் , தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழிற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒத்திராத குறித்த திகதிக்கு முன்னர் பரீட்சை கட்டணங்களைச் செலுத்திடாத மற்றும் சரியாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். உரிய வகையில் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யாமையினால் ஏற்படும் நட்டத்திற்குரிய பொறுப்பினை விண்ணப்பதாரிகளே ஏற்றல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றினை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுடையதாக அமையும்.பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்படிவம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பத்தினை ஒத்துள்ளதா என்பது தொடர்பாக விண்ணப்பதாரி கவனம் செலுத்துதல் வேண்டும்.அவ்வாறின்றேல் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படலாம்.

8.1 இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற ஊகத்தின் அடிப்படையில் உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி உரிய திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல் , விண்ணப்பதாரி மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கோ அல்லது இந்தப் பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதனை ஏற்றுக் கொள்வதாகவோ

கருதப்படமாட்டாது.விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து அறிவித்தலுக்கு ஏற்ப தகைமைகளைக் கொண்டுள்ளாரா எனப் பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லாமை தொடர்பாக அறிய வருமாயின் அவர்களின் பரீட்சார்த்தத் தன்மை செல்லுபடியற்றதாக்கப்படும்.

8.2 விண்ணப்பப்படிவத்தினைக் கொண்டிருக்கின்ற தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"சபரகமுவ மாகாண அரச சேவையின் நூலகர் சேவை தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2019 "** மற்றும் **நிரந்தர பதிவு மாவட்டத்தினையும்** குறிப்பிட வேண்டும்.

8.3 விண்ணப்பதாரியின் கையொப்பம் , அரசாங்க பாடசாலையின் அதிபர் / சமாதான நீதவான் / சத்தியப்பிரமாண ஆணையாளர் / பிரசித்த நொதாரிசு / முப்படையின் அதிகாரம் பெற்ற அலுவலர் / பொலிஸ் சேவை அலுவலர் வருடாந்தம் ரூ. 240,360/- ரூபா அல்லது அதற்கு விஞ்சிய திரட்டிய வேதனத்தினைப் பெறுகின்ற அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் ஒருவரினால் சான்றுபடுத்தப்படுதல் வேண்டும்.

8.4 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் **2019 ஜூன் மாதம் 27** திகதி அல்லது அதற்கு முன்னர் **" செயலாளர் , மாகாண அரச சேவை ஆணைக்குழு, சபரகமுவ மாகாண சபை , சபரகமுவ மாகாண சபைக் கட்டிடத் தொகுதி, புதிய நகரம் , இரத்தினபுரி** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

**9.0** விண்ணப்பதாரிகள் தமது ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்காக பின்வருகின்ற ஆவணங்களில் ஒன்றை பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

I. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை

II. செல்லுபடியாகின்ற கடவுச் சீட்டு

**10.0 தவறான தகவல்களைச் சமர்ப்பித்தல்**

விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரால் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகவல் பிழையானது அல்லது தவறானதென்று ஆட்சேர்ப்பிற்கு முன்னர் கண்டுபடிக்கப்பட்டால் , அவரது விண்ணப்பதாரர் நிலை இரத்துச் செய்யப்படும்.ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதன் பின்னர் அத்தகைய பிழையான அல்லது தவறான தகவல் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் உரிய சட்ட நடைமுறைகளுக்கு அமைவாக அரச சேவையிலிருந்து அவர் நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**11.0** இதில் குறிப்பிடப்படாத ஏதேனும் கருத்து இருந்தால் , அது தொடர்பாக சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதியானது.சகல விண்ணப்பதாரிகளும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொது பரீட்சை சட்ட திட்டங்களுக்கு அமைய இணைக்கப்பட்டுள்ளீர்கள்.

2019.06.04 ஆம் திகதி
சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு
சபரகமுவ மாகாண கட்டிடத் தொகுதி,
புதிய நகரம் , இரத்தினபுரி.

சுனேத்ரா குணவர்தன,
செயலாளர்,
சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழு,
சபரகமுவ மாகாணம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சபரகமுவ மாகாண அரச சேவையின் அரச நூலகர் சேவையின் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019**

---

பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் : ☐

சிங்களம் – 2 தமிழ் – 3
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

☐ அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

1.0 1.1 விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களை இறுதியாக எழுதி முதலெழுத்துக்களுடன் பெயர் : (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) உ+ம் PERERA A.B.C

……………………………………………………………………………………………..

1.2 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) ......................................................

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில் / தமிழில்) ....................................................................

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் ☐☐☐☐☐☐☐☐☐☐

2.0 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) ..................................................

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில் / தமிழில்) ................................................................

2.3 பரீட்சை அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) ...........................................................................

2.4 தொலைபேசி இலக்கம் ☐☐☐☐☐☐☐☐☐☐

3.0 3.1 விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவிட மாவட்டம் :

இரத்தினபுரி - 01 ☐
கேகாலை - 02
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்

3.2 பிரதேச செயலாளர் பிரிவு : .........................................

3.3 வதியும் கால எல்லை : ................................................

3.4 கிராம செயலாளர் பிரிவு : ............................................

4.0 4.1 பால் பெண் 1 ☐ உரிய இலக்கத்தினை எழுதுக
ஆண் 2

4.2 பிறந்த திகதி :

வருடங்கள் ☐☐☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4.3 2019.06.27 ஆம் திகதிக்கு வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

5.0 கல்வித் தகைமை

5.1 க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சை தொடர்பான விபரம் (சான்றிதழின் பிரதியினை இணைக்க.

I. பரீட்சை வருடம் மற்றும் மாதம் : ................................................

II. பரீட்சை இலக்கம் : ....................................................................

III. பெறுபேறுகள்

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

5.2 க.பொ.த (உயர் தரம்) பரீட்சை தொடர்பான விபரம் (சான்றிதழின் பிரதியினை இணைக்க.

I. பரீட்சை வருடம் மற்றும் மாதம் : ................................................

II. பரீட்சை இலக்கம் : .................................................

III. பெறுபேறுகள்

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

5.3 அறிவித்தலின் படி 5.0 ( ஈ) பந்திக்கு அமைய இப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு நீங்கள் பெற்றுக் கொண்டுள்ள நூலகவியல் தொடர்பான டிப்ளோமா பாடநெறி / பட்டம் தொடர்பான விபரங்கள் : (உரிய சான்றிதழ் பிரதியினை இணைக்க)

I. பட்டத்தினைப் பெற்றுக் கொண்ட பல்கலைக்கழகம் / நிறுவனம் ...........................
..........................................................................................................................

II. பெற்றுக் கொண்ட டிப்ளோமா / பட்டம் ............................................................

III. வருடம் ..............................................................

6.0 வேறு தகைமைகள் ..........................................................................................

7.0 நீங்கள் எப்பொழுதாவது எத்தகையதுமான ஒரு குற்றச்சாட்டிற்காக நீதிமன்றம் ஒன்றால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா? (உரிய கூட்டினுள் √ அடையாளமிடவும் )

| ஆம் | | | இல்லை | |
|---|---|---|---|---|

8.0 பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டு தொடர்பான விபரங்கள்

I. பரீட்சை கட்டணம் செலுத்திய அலுவலகம் : ......................................

II. பற்றுச் சீட்டின் இலக்கமும் திகதயும் : ..................................................

III. செலுத்திய பணம் : ..........................................................................

| |
|---|
| பற்றுச்சீட்டை பிரித்தெடுக்க முடியாதவாறு இங்கு ஒட்டவும்.<br>( பற்றுச் சீட்டின் நிழற்பட பிரதியொன்றைத் தம்வசம் வைத்துக் கொள்ளவும் ) |

9.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை

(அ) இவ்விண்ணப்பத்தில் நான் வழங்கியுள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டியவரையில் உண்மையானவை எனவும் நான் இத்தால் கௌரவத்துடன் வெளிப்படுத்துகின்றேன்.இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்திசெய்யாதிருந்தால் மற்றும் / அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாக பூர்த்தி செய்திருத்தல் ஆகியவற்றின் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக் கொள்வதற்கு உடன்படுகின்றேன்.மேலும் இங்கு அனைத்து பகுதிகளையும் சரியாக பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் தரப்பட்ட தகவல்கள் பொய்யானவை எனத் தெரிய வந்தால் நியமனத்திற்கு முன்னரான தகமை நீக்கத்திற்கும் , நியமனத்திற்கு பின்னர் தெரியவந்தால் சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் எதனையும் பின்னர் மாற்றம் செய்ய மாட்டேன்.

(ஈ) மேலும் இப் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக சபரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

.............................. ........................................................

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

10.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிபடுத்தல்

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி./செல்வி./ .................................... என்பவர் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் ,அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் .................................... ஆந் திகதி வைத்தார் என்றும் , உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச் சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் நான் இத்தால் உறுதிபடுத்துகின்றேன்.

.............................. ..................................

திகதி

உறுதிபடுத்தும் உத்தியோகத்தர் கையொப்பம்

உறுதிபடுத்தும் உத்தியோகத்தர் பெயர் : .......................

பதவி : .........................................

முகவரி : .........................................

(பதவி முத்திரை மூலம் உறுதிபடுத்தப்பட வேண்டும்)

11.0 அரச அல்லது மாகாண அரச சேவையில் தற்போது பதவி வகிக்கும் விண்ணப்பதாரிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள உறுதிபடுத்தலையும் நிறுவனத் தலைவர் , திணைக்கள தலைவர் அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(அ) இந்த திணைக்களத்தில் ..................... திகதி தொடக்கம் .......................... பதவியில் சேவைபுரியும் திரு./திருமதி./செல்வி./ ............................................ விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதிக்கு கிடைக்க வேண்டிய சம்பள ஏற்றங்கள் முழுவதையும் உழைத்துள்ளார் என்றும் , எதுவித ஒழுக்காற்று தண்டனைக்கும் ஆளாகவில்லை என்றும், விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியான மற்றும் உண்மையானவை என்றும் இத்தால் சான்றுபடுத்துகின்றேன்.

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கு இவர் தெரிவுசெய்யப்படுவாராயின் , விண்ணப்பதாரி தற்போது வகிக்கும் சேவையில் இருந்து விடுவிக்க முடியும் / முடியாது எனவும் தெரிவிக்கின்றேன்.

பெயர் ..........................................

பதவிப் பெயர் ..............................

திகதி ............................................

( திணைக்களம் /நிறுவனம் )

..........................................

திணைக்களத் தலைவர் அல்லது
அதிகாரம் அளிக்கப்பட்ட
உத்தியோகத்தர் கையொப்பம்